| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.07.2026 | |
| CC No. 85 /2023 | |
| சாட்சி :PW4 | |
| பெயர் : திரு. லட்சுமணன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.சின்னு | தொழில் : விவசாயம் |
| கிராமம் : செவலப்பட்டி, மேலூர் | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 45 /2026 |
| ( எதிரி ஆஜர் இல்லை , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஆவணத்தில் என்னோடு சடையாண்டி என்பவர் கையொப்பம் செய்தார். நான் கையெழுத்திட்ட தேதி, மாதம், வருடம் தற்போது ஞாபகமில்லை. ஒரு நாள் நான் பால் கொண்டு வந்துகொண்டிருந்த போது துவரங்குறிச்சி போலீசார் தகராறு நடைபெற்ற இடத்திற்கு வந்து வரைபடம் தயார் செய்து அது தொடர்பாக எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். **பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

2. உமாதேவி, பாலு எனக்கு என்ன உறவு என்றால் ஒரே ஊர்க்காரர்கள்.அவர்கள் ஊருக்குள் இருக்கிறார்கள், நான் களத்துவீட்டில் இருக்கிறேன். போலீசார் நான் ரோட்டில் நின்றிருந்தவரை இங்கு வந்துவிட்டு சென்றதாக கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். வரைபடத்தில் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை, வேறு பேப்பரில் செய்தேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை. பார்வை

மகசரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் ஆமாம்.

**மறு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் உண்மை என்றாலும் உண்மை சங்கதிகளை மறைத்து தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/−R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 16.07.2026 | |
| CC No. 85 /2023 | |
| சாட்சி :PW5 | |
| பெயர் : திருமதி. சத்திஜெயப்பிரியா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சுகந்தபிரியன் | தொழில் : மருத்துவர் |
| கிராமம் : மணப்பாறை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 34 /2026 |
| ( எதிரி ஆஜர் இல்லை , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1.நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். மேற்படி மருத்துவமனையில் கடந்த 21.05.2023 அன்று மாலை 06.30 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் நான் பணியிலிருந்த போது செவல்பட்டியை சேர்ந்த உமாதேவி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை அவரது கணவர் பாலு அழைத்து வந்தார். அவர் சுயநினைவோடு இருந்தார். உமாதேவியை பரிசோதித்த போது அவர் 21.05.2023 அன்று மாலை 03.30 மணியளவில் அவர்களுடைய பண்ணை நிலத்தில் வைத்து அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தென்னை மட்டையால் தாக்கியதாகவும் அதில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு வெளிப்புற காயங்கள் இல்லை. உடலில் வலியிருப்பதாக கூறினார். அதற்காக அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. மேற்படி உமாதேவிக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என சான்று வழங்கினேன். **என்னிடம் காட்டப்படும் பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ் நான் வழங்கியவைதான், அவை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. மேற்படி துவரங்குறிச்சி அரசு மருத்துவமனையில் கடந்த 21.05.2023 அன்று மாலை 05.00 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் நான் பணியிலிருந்த போது பாலு என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவரை அவரது மனைவி அழைத்து வந்தார். அவர் சுயநினைவோடு இருந்தார். பாலுவை பரிசோதித்த போது அவர் 21.05.2023 அன்று மாலை 04.00 மணியளவில் அவர்களுடைய பண்ணை நிலத்தில் வைத்து அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அரிவாள் மற்றும் குச்சியால் தாக்கியதாகவும் அதில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.
1. வலது முன்னங்கையில் ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது.
2. வலது கண்ணிற்கு கீழே ஒரு வீக்கம் இருந்தது.
3. வலது உச்சந்தலையில் தொடுவலியிருந்தது.

மேற்படி காயங்களுக்கு சிகிச்சை வழங்கி அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. மேற்படி பாலுவிற்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். **என்னிடம் காட்டப்படும் பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்றிதழ் நான் வழங்கியவைதான், அவை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. உமாதேவி எங்களது மருத்துவமனையில் 06.30 மணிக்கு வந்து சேர்ந்தார் என்றும் அவரை அவரது கணவர் அழைத்து வந்தார் என்றால் சரிதான். அவரது கணவர் பாலுவிற்கு மாலை 05.00 அட்மிஷன் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். 05.00 மணிக்கு அட்மிஷன் போட்டுவிட்டு மீண்டும் அவர் வெளியே செல்ல வேண்டும் என்றால் எங்களது அனுமதி பெற்று செல்ல வேண்டும் என்றால் சரிதான். பாலு என்னிடம் எந்த அனுமதியும் பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உமாதேவி வலியிருப்பதாக கற்பனையாக கூட சொல்ல வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. பாலுவிற்கு ஏற்பட்ட காயங்கள் தோட்டத்தில் வரப்பிலிருந்து வழுக்கி விழுந்தால் கூட மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. உமாதேவியும், பாலுவும் யார் தன்னை அடித்தார்கள் என்று குறிப்பிட்டு பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்களின் வயது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக மருத்துவமனையில் சிறு காயங்களுக்கு உள்நோயாளியாக அனுமதிக்கமாட்டோம் என்றால் சரிதான், இந்த காயங்கள் ஏன் அனுமதித்தோம் என்றால் உடலில் வலியிருப்பதாக சொன்னார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட பாலுவை சரியாக கவனிக்கவில்லை என்றும் பாலு நல்ல முறையில் இருந்துள்ளார் என்றும் நான் அவரை பரிசோதிக்காமல் அவருக்கு காயங்கள் இருந்ததாக சான்றுகள் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

2. அதே மருத்துவமனையில் கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு சிகிச்சை பார்த்த விபரம் பற்றி தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

மறு விசாரணை – இல்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.